**செ.வெ.எண்: 36 / மார்ச் /2020** **நாள்: 12.03.2020**

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை, கொரோனா வைரஸ் தடுப்பு தொடர்பாக பள்ளிக்கல்வித்துறை, கல்லூரி கல்வி இயக்ககம், சட்டக்கல்லூரி தேசிய தொழில் நுட்ப கழகம், அண்ணா பல்கலைக்கழகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், ஆகிய துறைகளுடன் விழிப்புணர்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (12.03.2020) நடைபெற்றது.**

------------

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

நமது மாவட்டத்தில் அனைத்து பள்ளி மற்றும் கல்லூரிகளில் கொரோனா நோய் தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பள்ளி மற்றும் கல்லூரியில் மாணவ, மாணவிகள் கைகளை சோப்பு மூலம் கழுவ வேண்டும், மாணவர்களுக்கு ஆசிரியர் மற்றும் பெற்றோர்கள், அறிவுறுத்த வேண்டும். அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் சிறப்பு வகுப்புகள் நடத்துவதை தவிர்க்க வேண்டும். நீட் தேர்விற்காக வகுப்புகள் நடத்துவதையும் தவிர்க்க வேண்டும். பள்ளிகளில் நிகழ்ச்சிகள் நடைபெறுவதையும் தவிர்க்க வேண்டும். கொரோனா இருமும் போதும், தும்மும் போதும் ஏற்படுகின்ற நீர்த்திவலைகள் மூலம் பரவும் தன்மை கொண்டதாகும்.

சளி, இருமல், உடல் சோர்வு, மூச்சு திணறல் மற்றும் காய்ச்சல் இருந்தால் நோயின் அறிகுறியாகும்.

கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மாணவ, மாணவியர்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ளும் வழிமுறைகள்:

மாணவ, மாணவியர்கள் இருமும் போதும், தும்மும் போதும் கைக்குட்டை அல்லது டிஸ்யூ தாள்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கைகளை தினமும் கிருமி நாசினி கொண்டு 10 முதல் 15 முறை சுத்தம் செய்ய வேண்டும். கைகள் சுத்தமாக இருந்தாலும் கிருமி நாசினிகள் கொண்டு கழுவி சுத்தம் செய்தல் வேண்டும். மக்கள் நெருக்கம் அதிகமாக உள்ள இடங்களுக்கு செல்வதனை தவிர்க்க வேண்டும். விளையாட்டிற்கு பின் கைகளை சுத்தமாக கழுவுதல் மற்றும் விளையாடும் போது பயன்படுத்திய பொருட்களையும் நன்கு கிருமி நாசினிகள் கொண்டு சுத்தம் செய்தல் வேண்டும்.

**செய்யக்கூடாதவை:**

பொது இடங்களில் உமிழ்தல், காய்ச்சல், இருமல் போன்ற அறிகுறிகள் இருப்பவர்களது கண், மூக்கு மற்றும் வாய்களை தொடுவதனை தவிர்க்க வேண்டும்.

**சிகிச்சைகள்:**

சளி, இருமல் மற்றும் காய்ச்சல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனே அருகில் உள்ள அரசு மருத்துவமனைகளையோ அல்லது அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களையோ அணுக வேண்டும். காய்ச்சல் நேரங்களில் இளநீர், ஓ.ஆர்.எஸ்., கஞ்சி போன்ற நீர்ச்சத்து அதிகம் உள்ள உணவினை அதிமாக உட்கொள்ள வேண்டும்.

பள்ளி மற்றும் கல்லூரிகளில் மேற்கொள்ள வேண்டிய சுற்றுப்புற சுகாதார நடவடிக்கைகள்:
1% லைசால் கொண்டு பள்ளி மற்றும் கல்லூரிகளை சுற்றியுள்ள தரைகள், படிகள் மற்றும் மாடிப்படி கைப்பிடிகள் போன்றவைகளை தினமும் சுத்தம் செய்தல் வேண்டும்.

தினமும் இறைவணக்கத்தின் போது, மாணவ, மாணவிகளிடையே இவை குறித்த விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும். பள்ளி மற்றும் கல்லூரிகளில் குழந்தைகளை ஏற்றிச் செல்லும் வேன் மற்றும் பேருந்துகளை காலை மற்றும் மாலை இரு வேளைகளிலும் கிருமி நாசினி கொண்டு தெளித்தல் (Spray) மற்றும் கைப்பிடி போன்ற இடங்களை தினமும் சுத்தம் செய்தல் வேண்டும்.

இக் கூட்டத்தில் டாக்டர்.கோபிநாத் (இணை இயக்குநர் மருத்துவ பணிகள்), டாக்டர். வனிதா முதல்வர் (கி.ஆ.பெ.வி. மருத்துவ கல்லூரி மருத்துவமனை) டாக்டர். அ.சுப்ரமணி (துணை இயக்குநர் சுகாதார பணிகள்) டாக்டர்.ஜெகநாதன் மாநகர் நல அலுவலர் மற்றும் பள்ளிக்கல்வித்துறை, கல்லூரி கல்வி இயக்ககம், சட்டக்கல்லூரி, தேசிய தொழில் நுட்பக்கழகம் (NIT), அண்ணா பல்கலைக்கழகம், ஊட்டச்சத்து, எஸ்.ஆர்.எம். மருத்துவக்கல்லூரி அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**